பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 09 செவ்வாய்க்கிழமை 23.01.2024 அதிர்வு 176

## 10 நாள்களின் பின்னர் இன்று நாடு திரும்புகிறார் ஜனாதிபதி

### நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நாளை இடைநிறுத்தம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று

04 ▶

### ரி - 56 ரக துப்பாக்கியால்

# பௌத்த தேரர் சுட்டுக்கொலை

### தென்னிலங்கையில் தொடரும் பயங்கரம்



- சுடர் திலீபன் -

கம்பஹாவில் பௌத்த தேரர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா, மல்வத்து - ஹிரிபிட்டிய பகுதியிள்ள விகாரையொன்றில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலேயே தேரர் சாவடைந்துள்ளார்.

44 வயதுடைய தேரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஊர்காவற்றுறையில் இன்று கோர விபத்து

## 8 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறையில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸூம் தனியார் பஸ்ஸூம் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைந்தனர்.

ஒருவர் படுகாயமடைந்த நிலையிலும், எழுவர் சிறியளவான காயங்களுடனும் யாழ்ப்பாணம்

04 ▶



# போதைப்பொருள் வலையமைப்புக்கு முடிவு கட்டும் வரை யுக்திய நடவடிக்கை தொடரும்

## ஒரு அடிகூடப் பின்வாங்கவே மாட்டோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சூளுரை

**“சர்வதேசத்தில் இருந்து எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் முன்வைத்த காலை பின்வைக்கப்போவதில்லை. போதைப்பொருள் வலையமைப்புக்கு முடிவுகட்டும்வரை யுக்திய நடவடிக்கை தொடரும்.”**

**- இவ்வாறு சூளுரைத்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-**

“யுக்திய செயல் திட்டத்தின் முதல் மாத நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. எனினும், யுக்திய நடவடிக்கையை முன்னெடுக்கும்போது பல தடைகளும் வருகின்றன, சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் வருகின்றன, நாட்டுக்கு எதிராகச் செயற்படும் சில குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்களும் எதிர்க்கின்றன. எமக்கு எதிராகச் செயற்படுகின்றன. சமூகவலைத்தளங்களில் சேறுபூசுகின்றன. போதைப்பொருள் வலையமைப்பில் உள்ளவர்களிடம் பணம் வாங்கும் தரப்புக்களே இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளன.

யுக்திய நடவடிக்கையை நிறுத்துவதற்குச் சில மதத்தலைவர்கள் முற்படுகின்றனர். சில சட்டத்தரணிகளும் தொடர்புபட்டுள்ளனர். அரசியல் கட்சிகளில் உள்ள சிலரும் தொடர்புபட்டுள்ளனர்.

அத்துடன் யுக்திய நடவடிக்கை என்பது ஊடக கண்காட்சி, நாடகம் என்றெல்லாம்கூட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது. அது பற்றி நாம் அலட்டிக்கொள்வதில்லை, போதைப்பொருள் வலையமைப்புக்கு முடிவு கட்டும் வரை எமது பணி தொடரும். ஒரு அடிகூடப் பின்வாங்கமாட்டோம்.” – என்றார்.

# நானுஓயா நகரை நாசமாக்கும் விஷமிகள்!

**(நானுஓயா நிருபர்)**

நுவரெலியா பிரதேச சபையின் கீழ் இயங்கும் நானுஓயா நகரில் உள்ள கடைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை நகரில் உள்ள வீதியோரங்களில் இரவு, பகல் வேலைகளில் திட்டமிட்டு ஒரு சிலர் வீசிச் செல்கின்றனர் என்று அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் நானுஓயா பிரதான நகரம் அசுத்தப்படுகின்றது என்றும், அந்த வழியாகச் செல்வோர் மூக்கை மூடியபடி நடந்து செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



மேலும், வீதியோரங்களில் கொட்டப்படும் குப்பைகளால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீதியோரம் குப்பைகளைக் கொட்டுவதால் அதனைச் சாப்பிடுவதற்காகக் கால்நடைகள் பிரதான வீதியில் சுற்றித் திரிவதால் பகல் மற்றும் இரவு நேரங்களில் வாகன சாரதிகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகின்றனர். அத்துடன் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன என்றும் அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தப் பகுதியில் குப்பைகளை அகற்ற வேண்டும் என்றும், குப்பைகளைக் கொட்டுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# தென்மராட்சியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்!

(த.சுபேசன்)

யாழ். தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி - இயற்றாலைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தாவளை, இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த 34 வயதான இளைஞரே சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

மேற்படி இளைஞர் தனது வீட்டில் நேற்று மின் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞருடைய சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் அன்னதான மண்டபத்தில் அன்னபூரணி!

(எஸ்.நிதர்ஷன்)

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் அன்னதான மண்டபத்தில் அன்னபூரணி அம்மன் சிலை கடந்த ஞாயிற்றுகிழமை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவில் அறங்காகாவல் குழுவின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது.

லண்டனை சேர்ந்த வைகுந்தவாசன் விஜயசக்தி குடும்பத்தின் நிதி பங்களிப்பில் தமிழ்நாடு கும்பகோணத்தை சேர்ந்த ஸ்தபதி கி. மணிகண்டன் குழுவினரால் அன்னபூரணி சிலை வடிவமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

இதன் போது நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாசகக் குருக்கள் தலைமையில் அன்னபூரணி சிலைக்கு விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அன்னபூரணி சிலை பிரதிஷ்டை நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



# சீருடை இல்லாமல் சிவில் சமூகத்தினருடன் தொடர்பாடலில் பொலிஸார் ஈடுபடக்கூடாது

## வெள்ளவத்தை சம்பவத்தை அடுத்து மனோ கணேசன் இப்படி வலியுறுத்து





"வெள்ளவத்தை பொலிஸ் வலயத்தின் பசல்ஸ் ஒழுங்கை பகுதியில் இரகசிய சுற்றுவளைப்புத் தேவைக்காக சீருடை அணியாமல் சென்ற பொலிஸ் அதிகாரிகளுக்கும், அப்பகுதியில் சிவில் கடமைகளில் ஈடுபட்டிருந்த வண. மகேஷ்வர குருக்களுக்கும் இடையில் இடம்பெற்ற பிரச்சினை, பொலிஸார் தமது செய்கை தொடர்பில், வண. குருக்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டதுடன் சமூக முடிவுக்கு வந்துள்ளது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணே–சன் எம்பி தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தையில் இந்து குருக்கள் – பொலிஸார் மத்தியில் ஏற்பட்ட பிணக்கு தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:–

"வாகனப் போக்குவரத்து தொடர்பில் ஏற்பட்ட சிறு பிணக்கை இனவாத சொற்பிரயோகம், வாக்குவாதம், உடல் ரீதியான பலவந்தம் வரை பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

குருக்களின் புதல்வர் பலவந்தமாக சீருடை அணியாத பிரிவினரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். இரு தரப்பும் சமாதான உடன்பாட்டுக்கு வந்து பிரச்சினை, நேற்று மாலையே முடிவுக்கு வந்துள்ளது.

குருக்களுடன் சற்றுமுன் உரையாடினேன். மத குருமார்களுக்கு உரிய பெருந்தன்மையுடன் பொலிசாஸாரைத் தான் மன்னித்து விட்டதாகக் குருக்கள் என்னிடம் தெரிவித்தார்.

வண. குருக்கள் அவ்விதம் கூறியிருந்தாலும், வெள்ளவத்தை பொலிஸ் நிலைய மட்ட நடவடிக்கைகளை எடுக்கும்படியும், இனி பொலிஸ் சீருடை இல்லாமல் பொலிஸ் அதிகாரிகள், சிவில் சமூகத்துடன் தொடர்பாடலில் ஈடுபடக்கூடாது எனவும் வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி சுபாஷ் காந்த வெலவிடம் கண்டிப்பாகக் கூறியுள்ளேன்.

அதன்படி தனது நிலைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவதாக பொறுப்பதிகாரி காந்தவெல எனக்கு உறுதியளித்துள்ளார்." – என்று மனோ கணேசன் குறிப்பிட்டுளளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பௌத்த தேரர்...

சம்பவத்தில் படுகாயமடைந்த தேரர், கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ரி – 56 ரக துப்பாக்கியால் இந்தச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்றும், 4 சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பெலியத்தை பிரதேசத்தில் அரசியல்வாதி ஒருவர் உட்பட 5 பேர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், இன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஊர்காவற்றுறையில்...

போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பஸ்ஸின் சாரதிகள் இருவரும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இன்று காலை 6.30 மணியளவில் பயணி ஒருவரை ஏற்றுவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வீதியில் நிறுத்தப்பட்ட நிலையில் பின்னால் வேகமாக வந்த தனியார் பஸ் மோதியுள்ளது.

இதன்போது இரண்டு பஸ்களும் பலத்த சேதமடைந்தன. காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் வாகனம் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### 10 நாள்களின் பின்னர்...

நாடு திரும்பவுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காகக் கடந்த 13ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி, உகண்டாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் அமைப்பின் மாநாட்டிலும், மேலும் சில முக்கிய சர்வதேச மாநாடுகளிலும் பங்கேற்றிருந்தார்.

10 நாள்களின் பின்னர் அவர் இன்று நாடு திரும்புகின்றார்.

அதேவேளை, நாடாளுமன்ற கூட்டத்தொடர் நாளை நள்ளிரவு முதல் இடைநிறுத்தப்படவுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நாளை வெளியிடுவார்.

புதிய கூட்டத்தொடர் பெப்ரவரி 7 ஆம் திகதி கூடவுள்ளது.

ஜனவரி மாதத்துக்கான 2ஆவது வார நாடாளுமன்றக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமானது. இன்றும், நாளையும் மாத்திரமே சபை நடவடிக்கை இடம்பெறவுள்ளது.



# சைக்கிளிங் கிறீன் அமைப்பினரால் மரம் நடுகையும் புத்தகம் வழங்கலும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹெப்பி எயிட் அமைப்பின் ஏற்பாட்டில் சைக்கிளோட்ட வீரர்களை உள்ளடக்கிய சைக்கிளிங் கிறீன் அமைப்பினர் பள்ளிவாசல் வளாகத்தில் மர நடுகை செய்தனர். அத்துடன் பாடசாலைகளுக்கும், அமைப்புக்களும் புத்தகங்கள் வழங்கப்பட்டன. அண்மையில் நாவலடி மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலில் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த மர நடுகை நிகழ்வில் சைக்கிளிங் கிறீன் கழக அங்கத்தவர்களுடன் மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.எம்.எம். முபீன், வருமானவரி உதவி ஆணையாளர் எம்.ஐ.எம். உவைஸ், கணக்காளர் யூ.எல். ஜவாஹிர், தென் கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர் எஸ்.எம். றம்ஸீன், றய்னா நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் றிஸ்கான் சாபி, பிரபல தொழிலதிபர் எம். ஜெளபி, தொழிலதிபர் எம்.ஐ. அறபாத், எஸ்.எம். ஹுசைன், ஹெப்பி எய்ட் சார்பில் றிப்கான் றபாய்தீன், ஹரிஸ் முகம்மட், ஹஸ்மிர் றபீக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# ஹக்கீமுடன் ஒரு சந்திப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான இடைக்காலப் பொறிமுறை செயலக உறுப்பினர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை கட்சியின் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் சந்தித்தனர்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிய உத்தேச ஆணைக்குழு தொடர்பான அபிப்பிராயங்களையும், விதந்துரைகளையும் அறிந்து கொள் வதைமையப்படுத்திக் கலந்துரையாடினர்.

இந்த ஆணைக் குழு பற்றிய முன்மொழியப்பட்ட சட்ட மூல வரைவு ஜனவரி 2 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சிறீதரனின் புதிய பாதை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்வாகி இருக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தமது முதல் அறிவிப்பில் - அறிக்கையில் - வெளியிட்டிருக்கும் கருத்து பலரது கவனத்தையும் ஈர்த்து இருக்கின்றது.

தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கும் அவரின் பாரிய முயற்சியாக - விருப்பமாக - அது வெளிப்படுத்தப்பட்டாலும், அதன் ஊடாக அவர் சொல்லும் கருத்து நிலைப்பாடு அதிகம் ஊன்றிக் கவனிக்கப்படுகின்றது.

அந்த அறிவிப்பை - அழைப்பை - விடுத்தவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர். ஆகவே அவை வெறும் அரசியல் வார்த்தை ஜாலங்களாக இருக்க முடியா. அதையும் தாண்டி அர்த்தம் நிறைந்தவையாகவே கவனிக்கப்பட வேண்டியவை.

ஒற்றுமைக்காக 2009 நிலைக்கு - புலிகளின் கால நிலைப்பாட்டுக்கு - செல்வோம் என வலியுறுத்தும் சிறீதரன் அறிக்கையின் இறுதியில் மாவீரர்களின் கனவுகளை நினைவாக்குவதற்கு உழைப்போம் என்றும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இதனை பரிசீலிக்கும் போது 2009இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு மீள வலியுறுத்தப்படுவதாகத்தான் அது வெளிப்படுகின்றது.

2010க்கு பின்னர் இவ்வளவு காலமும் சம்பந்தன் - சுமந்திரன் - மாவை அணி, ஏன் இதே சிறீதரனும் உட்பட்டு - வலியுறுத்திய 'ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு' என்ற நிலைப்பாட்டில் இருந்து பாரிய கருத்து நிலை வேறுபாட்டுக்கு விவகாரம் திரும்பி இருப்பதாகவே தோன்றுகின்றது.

2009 நிலைப்பாட்டை இலங்கைத் தமிழரசு கட்சி உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் எடுப்பது என்பது - அதுவும் மாவீரர்களின் கனவை நினைவாக்குவோம் என்ற கோஷத்தோடு அதை முன்னெடுப்பது என்பது - வெறும் வார்த்தைஜால விவகாரங்களில் அடங்கிப் போய் விடக் கூடியது அல்ல. அதையும் தாண்டிய விளைவுகளை - சில சமயங்களில் விபரீதங்களை - தரக்கூடியது.

சிறீதரன் சாதாரண ஓர் எம்.பியாகப் பேசுவது என்பது வேறு. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக மற்றைய தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து கொள்கையை அறிவிப்பது என்பது வேறு. பின்னையது ஆழ்ந்த அர்த்த பரிமாணங்களுடன் பார்க்கப்பட வேண்டியதாக உள்ளது.

சுமந்திரனைத் தமிழ்த் தேசிய விரோதியாகவும், சிறீதரனைத் தமிழ்த் தேசியக் காவலனாகவும் பார்க்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், அதற்காக வெடி கொளுத்திப் போட்ட வெளிச் சக்திகளுக்கும் இந்த அறிவிப்பு பெரும் மகிழ்ச்சியைத் தரும். வரவேற்பைப் பெறும்.

இது பேசுவதற்கும் அறிவிப்பதற்கும் சுலபமான விடயம். ஆனால் பயணிப்பதற்கு மிக நெருக்கடியான பாதை. கல்லும் முள்ளும், சரிவும் பள்ளமும், மோசமான ஏற்றங்களும் இறக்கங்களும் கொண்ட வழித்தடமாக அது இருக்கப் போகின்றது.

2009க்கு முந்திய நிலைப்பாடு என்பதும், மாவீரர் கனவுகளை நினைவாக்கும் திட்டம் என்பதும் வெறும் பகட்டுக் கோஷங்களுடனும் வெளி வேஷங்களுடனும் அரசியல் நடத்தும் விடயம் அல்ல. அவற்றுக்கு அப்பால் இந்தத் தேசிய பாதையில் தமிழ் தேசத்தை வழிநடத்திச் செல்ல முடியும் என்று சிறீதரன் நம்புவாரானால் - அதைச் செயலில் செயல்படுத்த முடியும் என்று அவர் கருதுவாரானால் - அதை அவர் செயல்படுத்துவதும் செயல்படுத்த முயல்வதும் தப்பில்லை.

தெளிவான பாதை வரைபடம் இல்லாமல், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போல வெற்றுக் கோஷத்தையும், வறட்டு சித்தாந்தத்தையும் முன்வைத்து, அதை அடைவதற்கான மார்க்கமே இன்றி, வெறும் நாடாளுமன்றப் பதவிகளுக்காகவும் தேர்தல் வெற்றிகளுக்காகவும், கொள்கை அரசியல் பேசும் விவகாரம் அல்ல இது. அதுவும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை அரசுக்கு வெறும் அழுத்தம் மட்டுமே எங்களால் தர முடியும், அதற்கு அப்பால் எதுவும் செய்ய முடியாது என்ற தனது கையறு நிலையை - கையை விரித்து விட்ட நிலையை - இந்தியா தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு நேரில் - வெளிப்படையாக - தெரிவித்துவிட்ட பின்னணியில், தமிழ்த் தேசியப் பாதையில் 2009 நிலைப்பாட்டில், மாவீரர்களின் கனவை நினைவாக்குவோம் என்ற உயரிய இலக்கு குறித்த அழைப்பு விடுத்திருக்கின்றார் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர்.

இது கிளிநொச்சியுடன் மட்டுப்படுத்தப்படும் வெற்று அரசியல் பேச்சு - அழைப்பு - அல்ல. அல்லது உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் ஆதரவாளர்களையும் வாக்காளர்களையும் உசுப்பி விடும் உணர்ச்சிப் பேச்சுமல்ல. அதையும் தாண்டி தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும், பல்வேறு அரசியல் பரிமாணங்களுடன் பரிசீலிக்கப்படும் முக்கிய அரசியல் நிலைப்பாடு மாற்றம் *(Paradigm Shift)*. அறிவித்த பொறுப்போடு, சமூகத்தை வழிநடத்திச் செல்லும் கடப்பாடு கொண்ட விடயமும் கூட.



# கடற்கரைப் பிரதேசங்களில் நிறையும் குப்பை கூளங்கள்

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தைத் தொடர்ந்து இந்த மாவட்டத்தின் கடற்கரைச் சூழல் வெகுவாக பாதிப்படைந்து காணப்படுகிறது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரைப் பிரதேசங்களில் குப்பை கூளங்கள், பொலித்தீன் கழிவுகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் போன்றன நிறைந்து காணப்படுவதால் பொது மக்களும் கடற்றொழிலாளர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த வாரம் இந்த மாவட்டத்தில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ள நிலைமையின் போது ஆறுகள், குளங்கள் மற்றும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் காணப்பட்ட நீர்த் தாவரங்கள், கழிவுப் பொருள்கள் போன்றன நீர் வழியாக கடலைச் சென்றடைந்தன.

இவை கடலலை மூலம் தரைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசங்கள் குப்பைகளால் நிறைந்து காணப்படுகின்றன.

இதேவேளை, சில பிரதேசங்களில் இந்தக் கழிவுப் பொருள்களில் விஷப் பாம்புகள் மறைந்திருந்து நடமாடி வருகின்றன என்று பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது தவிரக் கழிவுப் பொருள்களில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படும் கழிவுப் பொருள்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் துப்புரவு செய்து பொதுமக்கள் நலனில் அக்கறை செலுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# நோய் ஒழிப்புக் கலந்துரையாடல்

(அஸ்ஹர் ஆதம்)

கல்முனைப் பிராந்தியத்தில் காசநோய் மற்றும் மலேரியா ஒழிப்பு வேலைத் திட்டத்தை துரிதப்படுத்துவது தொடர்பிலும் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடல் நடைபெற்றது.

சுகாதாரப் பணிமனையின் கலந்துரையடல் மண்டபத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. கலந்துரையடலில் பிரிவுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.





# டெங்கு ஒழிப்பு சிரமதானம்!

(ஹஸ்பர்)

திருகோணமலை செல்வநாகபுரம், உதயபுரி, உதய விருச்சம் சன சமூக நிலைய அனுசரணையில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு நேற்று (22) இடம்பெற்றது.

உப்புவெளி பொலீஸ் அதிகாரி மற்றும் பொதுச் சுகாதர பரிசோதகர் உதயன் மற்றும் கிராம சேவகர் ஆகியோரின் தலைமையில் உதயபுரிக் கிராமப் பொது மக்கள், சகல சங்க பிரதிநிதி களின் பூரண ஒத்துழைப்போடு டெங்கு ஒழிப்பு நிகழ்வு நடைபெற்றது .

டெங்கு பரவும் இடங்கள் உள்ளிட்ட பல வடிகான்களும் சுத்தம் செய்யப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

# மன்னார் பொது நூலகத்துக்கு மும்மொழி புத்தகம் கையளிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் நாடு முழுவதும் அரச கரும மொழிக் கொள்கையை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, நூலகங்களுக்கு மும்மொழி நூல்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு அங்கமாக மன்னார் பொது நூலகத்துக்கெனப் புத்தகங்களை மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன், மன்னார் நகரசபை செயலாளர் சே.லெ.றெனால்டடிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு நேற்று (22) திங்கள் கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மக்களிடையே வாசிப்புக் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. பரஸ்பர புரிதலை அதிகரிக்கவும் பொது மக்கள் தம் நாட்டு தேசிய மொழியில் தமது அறிவு மற்றும் திறனை வளர்த்துக் கொள்ளவும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் புத்தகங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளருடன் இணைந்து மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) ய. பரந்தாமன், உதவி மாவட்ட செயலாளர் பு.டிலிசன் பயஸ் மற்றும் மாவட்டச் செயலக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# திருமலையில் ஊடகவியலாளர் ஒன்று கூடல்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட ஊடக வியலாளர்களுக்கான ஒன்று கூடல் வைபவம் ஒன்று திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் இடம் பெற்றது.

இதனை அகம் மனிதாபிமான வளநிலையம் ஏற்பாடு செய்திருந் தது.

இக்கட்டான கால சூழ் நிலையில் பணியாற்றிய சிரேஷ்ட ஊடகர்களின் அனுபவப் பகிர்வும் இதன் போது இடம்பெற்றது.

கடந்த யுத்த கால கட்டத்தில் திறம் படப் பணியாற்றிய ஊடகவியலாளர்க ளின் பணி பற்றியும் பாராட்டப்பட்டு பேசப்பட்டது.

ஊடகவியலாளர்களுக்கான 2024 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டியும் வழங்கப்பட்டது.

இதில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டு மணி லவகுசராசா உட்பட சுமார் 30 இற்கும் உட்பட்ட பிரதேச ஊடகவிய லாளர்கள் கலந்து கொண்டனர்.




# மருதமுனையில் மீனவர்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இயற்கை அனர்த்தம், வெள்ளப் பெருக்கு, கடல் கொந்தளிப்பு போன்ற பல்வேறு காரணங்களால் தமது தொழில் வாய்ப்புகளை இழந்து நெருக் கடியான சூழலுக்குள் தள்ளப்பட்ட கடற் றொழில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட மருதமுனை கரைவலை உரிமையாளர்கள் மீனவர் கூட்டுறவு சங்கம் இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வு சங்கத்தின் தலைவர் ஏ.ஆர். எம் இக்பால் தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள தனவந்தர்கள் நிவாரணப் பொதிகளை வழங்கி வைப்பதற்கு அனுசரணைகள் வழங் கினர். அவர்களுக்கு மீனவர் சங் கத்தினர் நன்றிகளைத் தெரிவித்த னர்.



நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி கலந்து கொண்டார்.

கடற்றொழில் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 320 மீனவ குடும்பங் களுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



# அக்கரைப்பற்று பிராந்தியத்தில் நடந்த யுக்திய பரிசோதனை!

**(பாறுக் ஷிஹான்)**

சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கும் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக பொலிஸாரால் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிராந்தியத்தில் திட்டமிட்ட குற்றச் செயல்களையும் ஆபத்தான போதைப் பொருள் கடத்துவதையும் தடுப்பது மிகவும் அவசியமான நோக்கமாகக் கொண்டு யுக்திய பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சோதனை நடவடிக்கையானது நேற்று மாலை முதல் இரவு வரை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு - அக்கரைப்பற்று பிரதான வீதி மற்றும் அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் பாலமுனை பகுதியில் உள்ள பொலிஸ் சோதனை சாவடிக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டுச் சோதனை செய்யப்பட்டன.

போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்குரிய தொலைபேசி இலங்கங்கள் எழுதப்பட்ட ஸ்டிக்கர்களும் பஸ்களில் பொலிஸாரால் ஒட்டப்பட்டன.

அத்துடன் பொலிஸ் மோப்ப நாய் உதவியுடன் இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம ஆலோசனைக்கமைய அக்கரைப்பற்று பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே பண்டார வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி தேசப்பிரிய பத்ரன மேற்பார்வையில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று, திருக்கோவில், இறக்காமம், நிந்தவூர், காரைதீவு உள்ளிட்ட அம்பாறை மாவட்டத்தின் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்விசேட சோதனை நடவடிக்கையில் இணைந்திருந்தனர்.








# போதைப்பொருளுக்கு அடிமையானோரை புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தும் திட்டம்

(பாறுக் ஷிஹான்)

சட்டத்தை மாத்திரம் அமுல்படுத்துவதனூடாக இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வைக் காணமுடியாது என்ற காரணத்தால் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தும் திட்டம் அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'யுக்தியவுக்கான சக்தி' என்ற தொனிப் பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மனிதநேயச் செயற்பாடானது அம்பாறை மஹாவாபி விகாரை மற்றும் சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு அரங்கு ஆகிய இடங்களில் நேற்று (22) ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து 7 நாள்களுக்கு வதிவிட நிகழ்வாக நடத்தப்படவுள்ளது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை, மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், கல்வி நிறுவனங்கள், சுகாதார சேவை மற்றும் கலாச்சார விளையாட்டுப் பிரிவுகளைத் தொடர்புபடுத்தி செயற்படுத்தப்படும் இந்தச் செயற்பாட்டுக்கு போதைப் பொருளுக்கு அடிமையான அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 150 நபர்கள் உட்படுத்தப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் சகலருக்கும் காலை 5 மணிக்கு வழங்கப்படும் இலைக்கஞ்சியில் இருந்து சகல உயர்தர உணவுகளும் அம்பாறை பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜே. எச். எம். என் ஜயபத்மவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிகாட்டலுக்கு அமைய இந்த நிகழ்ச்சியை அம்பாறை பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீ மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம். எம். ஜி. பி. எம். றஸாட் ஆகியோரால் வழிநடத்தப்படுகிறது.

# விருது வழங்கல் விழாவும், பரிசளிப்பு!

(அபு அலா )

ஏ.ஆர்.எம். முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருட இறுதி பரிசளிப்பு விழாவும், ஆசிரியர்களை கௌவித்து விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் (20) சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் முன்பள்ளி பாலர் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச கோட்ட கல்வி அதிகாரி என்.எம்.ஏ.மலீக், மல்ஹருஸ்சம்ஸ் வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி றிப்கா அன்சார், கல்முனை வலயக் கல்வி அலுவலக பாலர் பாடசாலை கல்வி இணைப்பாளர் அஸ்ஷேக் ஐ.எல்.எம்.அனீஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி வை.திருப்பதி, என்.எம்.எஸ்.சிரின், ஏ.எம்.ஆயிசா, திருமதி சங்கீதா சுதர்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.










# மண்முனைப்பற்றில் பொங்கல் விழா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உழவர் திருநாளாம் தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி தெட்சண கௌரி தினேஷ் தலைமையில் மாவிலங்கன்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மண்முனை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வளாகத்தில் வயல் அறுவடை பாரம்பரிய நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிளை ரீதியாக பல வகையான பொங்கல் பானைகளால் நிகழ்வை அலங்கரித்தனர்.

இதன் போது ஆன்மீக மாவிலங்கன் துறை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மண்முனை ஸ்ரஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு மகேந்திரராசா ரஜீவனின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. லோகினி விவேகானந்தராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மனோரஞ்சனி ஜெயச்சந்திரன், கணக்காளர் வல்லிபுரம் நாகேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் சின்னத்துரை திவாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவிலங்கன்துறை ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ பத்திரகாளியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகள், உடுக்கு இசை, பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உழவர் பாடல், கிராமிய பாடல், என பல கலை நிகழ்வுகளும் பொங்கல் விழாவை சிறப்பித்ததிருந்தன.











# யாஎல, சுகந்திபுரம் பிரதேசத்தில் ஆயிரத்து 500 கிலோ கஞ்சா எரிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

யாஎல, சுகந்திபுரம் பிரதேசத்தில் ஆயிரத்து 500 கிலோ கஞ்சா எரிப்பு. சந்தேக நபர்களிடம் இருந்து உள்ளூர் துப்பாக்கியும் (20) கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை 12 ஆவது படை முகாம் இராணுவத்தினரும், கோணகரை பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர்களிடம் இருந்து ஆயிரத்து 500 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கஞ்சா தோட்டமும் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது என்று கோணகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு அரச அதிபருக்கு காத்தான்குடியில் கௌரவிப்பு

**(பழுவூரான்)**

காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தால் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் காத்தான்குடி காப்பகத்தின் பிரதான மண்டபத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தின் தலைவி சல்மா ஹம்சா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் நழிமி, காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செய லாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன், காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தின் பணிப்பாளர் எம்.ஐ. அஜ்வத் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பக மாணவிகளின் நிகழ்வுகள் இடம்பெற்றன. காப்பகத்தில் உள்ள பெண்களுக்கான காப்பக அடையாள அட்டை அரச அதிபரால் வழங்கப்பட்டன.





# தமிழ்க் கலைஞர்களுக்கு மட்டக்களப்பில் மகுடம் சூட்டல்!

(பழுவூரான்)

சாதனைப் பயணத்தில் தங்களை அர்ப்பணித்துள்ள கலைஞர்களை மகுடம் சூட்டிக் கௌரவிக்கும் வெல்ஸ் உன்னத நிகழ்வு மட்டக்களப்பு தேவ நாயகம் கலையரங்கில் சனிக்கிழமை (20) இரவு இடம்பெற்றது.

வேவ் நடனப்பள்ளி இயக்குனர் எஸ். கிருஸ்ணகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக் களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபால ரெத்தினம், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந் திரகுமார் மற்றும் கிழக்குப் பல் கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கலைகள் நிறுவகப் பணிப் பாளர் திருமதி புளோரன்ஸ் பாரதி கென்னடி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இதன்போது நாடளாவிய ரீதியாக இசை, நடனம், கல்வி, ஊடகத் துறைகளில் சிறப்பாகச் செயற்படும் 48 கலைஞர்கள் விருது, சான்றிதழ் வழங்கப்பட்டன.











# அயோத்தி ராமர் கோயிலில் குவியும் பக்தர்கள் கூட்டம்!



அயோத்தி ராமர் கோயிலில் நேற்று பால ராமர் சிலை பிரதிஷ்டை விழா கோலாகலமாக நடைபெற்றது. பால ராமர் கண் திறந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பிரதமர் நரேந்திர மோடி கருவறையில் பூஜை செய்தார்.

இந்த நிலையில் கோயிலில் இன்று காலை முதல் பக்தர்கள் தரிசனத்துக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தினமும் காலை 7 மணி முதல் 11.30 மணி வரையிலும், பின்னர் மதியம் 2 மணி முதல் மாலை 7 மணி வரையிலும் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனக் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ராமர் கோயில் பிராண பிரதிஷ்டையைக் காண அயோத்தியில் குவிந்திருந்த பக்தர்கள் இன்று காலை கோயிலில் குழந்தை ராமரை தரிசிக்கத் திரண்டனர். காலை 3 மணி முதலே பக்தர்கள் தரிசனத துக்கு ஆயத்தமாகினர். கூட்டம் கட்டுக் கடங்காமல் சென்றதால் பொலிஸார் திணறினர்.

கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கானோர் கோயிலுக்குள் செல்லக் கூடினர். அவர்களை சீர்படுத்தி கோயிலுக்குள் அனுமதிக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பணி பொலிஸாருக்கு சவால் நிறைந்ததாக அமைந்துள்ளது.

அயோத்தி கோயிலில் இன்று காலை குவிந்த பக்தர்கள் கூட்டம் தொடர்பான காட்சிகள் அடங்கிய காணொலிகள் வெளியாகி வருகின்றன.

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி யில் ஸ்ரீராமஜென்ம பூமியில் ராமர் கோயில் கட்டலாம் என்று உச்ச நீதிமன்றம் கடந்த 2019 நவம்பரில் தீர்ப்பளித்தது. இதைத் தொடர்ந்து, 2020 ஓகஸ்ட் 5ஆம் திகதி அயோத்தியில் ராமர் கோயில் கட்ட பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட ஸ்ரீராமஜென்ம பூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளை, கோயில் கட்டுமான பணிகளை விரைவாக மேற்கொண்டது.

கோயில் வளாகம் சுமார் 72 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் 2.7 ஏக்கரில் நாகரா கட்டுமான கலையில் 3 மாடிகள், 5 குவிமாடங்கள், கோபுரம் என 161 அடி உயரத்தில் பிரம்மாண்டமாக ராமர் கோயில் கட்டப்பட்டது.

# ராகுல் காந்தியின் யாத்திரை தடுத்து நிறுத்தம்: காங்கிரஸ் தொண்டர்கள் பொலிஸாருடன் முறுகல்



இந்திய ஒற்றுமை நியாய யாத் திரை மேற்கொண்டுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி அசாம் தலைநகர் குவாஹாட்டிக்குள் நுழையவிடாமல் தடுக்கப்பட்டதால் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை மேற்கொண்டுள்ளார்.

மணிப்பூரில் தொடங்கிய இந்த யாத்திரை நாகலாந்து வழியா அசாம் வந்தடைந்துள்ளது. அசாமில் நியாய யாத்திரை நடத்தி வரும் காங்கிரஸ் எம். பி. ராகுல் காந்தி நேற்று அங்குள்ள ஸ்ரீமந்த சங்கரதேவா பிறந்த இடமான படத்ராவா சத்ராவில் சாமி தரிசனம் செய்ய திட்டமிட்டிருந்தார்.

துறவி, அறிஞர், சமூக - மத சீர்திருத்த வாதியான ஸ்ரீமந்த சங்கர்தேவா, அசாம் கலாச்சாரம், மத வரலாற்றின் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அறி யப்படுகிறார். ஆனால், அந்தக் கோயிலுக் குச் செல்ல அவருக்கு அனுமதி மறுக்கப் பட்டது. இதற்கு, ஒரே நாளில் ராமர் கோயில் திறப்பு, ராகுல் யாத்திரை என இரண்டு நிகழ்வுகள் நடந்தால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படலாம் எனக் காரணம் கூறப்பட்டது. இதன் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருக்கின்றன என ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் இன்று அசாம் தலைநகர் குவாஹாட்டிக்குள் நுழைய முயன்றபோது அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். இதனால் பொலிஸாருக்கும் காங்கிரஸ் கட்சியின ருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட் டுள்ளது.

ராகுல் காந்தி குவாஹாட்டியின் பிரதான பகுதிகள் வழியாக யாத்திரையை மேற்கொள்ளாமல் குறுக்கு பாதை வழி யாக செல்ல வேண்டும். போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால்குறுக்கு பாதையில் செல்ல வேண்டும் என்று கூறி யாத்திரை தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஏற்கெனவே ராகுல் காந்தி யாத்திரை திட்டமிட்ட பாதையில் நடக்கவில்லை என்று அசாம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் இன்று போக்குவரத்து நெரிசல் காரணத்துக்காக தடுக்கப்படுவதாக பொலிஸார் கூறிய தால் காங்கிரஸ் தொண்டர்கள் கொந்த ளித்துள்ளனர்.

# ஹவுதிகளின் தளங்களை இலக்கு வைத்து அமெரிக்கா, பிரித்தானியா வான் தாக்குதல்



யேமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தளங்களை இலக்கு வைத்து அமெரிக்காவும், பிரித்தானியாவும் இணைந்து புதிய வான்வழி தாக்குதல்களை நடத்தியுள்ளன.

ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஏவுகணை மற்றும் நிலத்தடி ஆயுத கிடங்குகள் உள்ளிட்ட 8 இடங்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பெண்டகன் தெரிவித்துள்ளது.

ஈரான் ஆதரவுடைய ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் ஊடாக பயணிக்கும் ஏனைய நாடுகளின் வர்த்தக கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வந்தன.

இந்தநிலையில் அந்த கடல் வழியின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தொடர்ச்சியாக கூட்டு முயற்சியில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

பதற்ற நிலையை தணித்து, செங்கடலின் ஸ்த்திரத்தன்மையை பாதுகாப்பதே எமது நோக்கம் என பெண்டகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 11 ஆம் திகதி பிரித்தானியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியில் அமெரிக்க தாக்குதல்களை நடத்தியிருந்த நிலையில், இது இரண்டாவது சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

அவுஸ்ரேலியா, கனடா, பஹ்ரைன் மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்காவில் 7 பேர் சுட்டுக்கொலை: தாக்குதல்தாரி தப்பியோட்டம்

அமெரிக்காவின் சிகாகோ அருகே உள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தில் இரண்டு வீடுகளில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்றைய தினம் கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் ஒரு வீட்டிலிருந்து ஐவரும் மற்றைய வீட்டில் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர், ே நற்று முன்தினம் வேறொரு பகுதியில் வைத்து சுமார் 42 வயது மதிக்கத்தக்க ஒருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிகாகோ அருகில் உள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தின் ஜோலியட் என்ற பகுதியில் திடீரென வாலிபர் ஒருவர் இரண்டு வீட்டிற்குள் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.




தப்பியிடியுள்ள தாக்குதல்தாரி மற்றும் அவருடைய கார் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுக்குமாறும் பொலிஸ் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் பதிவான நில அதிர்வால் 6 பேர் காயம்



சீனாவின் தென்மேற்கு பிராந்தியமான சின்ஜியாங் மாகாணத்தில் பதிவான நில அதிர்வில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த நில அதிர்வு காரணமாக 120 வீடுகள் சேதமடைந்துள்ளன என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் இன்று அதிகாலை ரிக்டர் அளவுகோலில் 7.1 மெக்னிடியூட் நில அதிர்வு பதிவானது.

இந்த நில அதிர்வு அந்த மாகாணத்தின் பல இடங்களில் உணரப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.